**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**CC 126/2014**

Deposition of witness for Prosecution **PW** 4

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.சங்கர்** |
| Father's/Husband Name | : | **சங்கரபாண்டியன்** |
| Age | : | |
| Village and Taluk | : | |
| Caste and Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 01–03–2023

(1, 2 எதிரிகள் வழக்கறிஞருடன் ஆஜர். 4, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 4, 5 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு –317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**முதல் விசாரணை**

1. நான் கீழப்புதூரில் குடி இருக்கிறேன். சாட்சி குமார் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது அல்ல. அது என்னுடைய கையப்பத்தை போல் உள்ளது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவ இடத்தை போலீசார் பார்த்தார்களா என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. 17.3.2013 ஆம் தேதி 18.30 மணிக்கு நீங்களும், சாட்சி குமார் என்பவரும் எதிரி சின்னதுரை என்பவர் வீட்டு முன்பு வந்து கொண்டிருந்தீர்களா என்றால் அவ்வாறு இல்லை. அப்போது போலீசார் மேற்படி எதிரி சின்னதுரை என்பவரது வீட்டை தென்காசி மகளிர் போலீசார் பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நீங்களும், சாட்சி குமாரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதற்கு மாறுதலாக சாட்சியமளிக்கிறீர்கள்

என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதி மன்றத்தில் சாட்சி என் முன்பாக சாட்சியம் அளித்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கபட்டு சரி என சாட்சியால் ஒப்பு கொண்டு கையெப்பம் செய்யப்பட்டது

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் நீதிமன்றம் செங்கோட்டை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**...**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**CC 126/2014**

Deposition of witness for Prosecution **PW** 3

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.குமார்** |
| Father's/Husband Name | : | **பரமசிவன்** |
| Age | : | |
| Village and Taluk | : | |
| Caste and Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 01-03-2023

(1, 2 எதிரிகள் வழக்கறிஞருடன் ஆஜர். 4, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 4, 5 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு –317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**முதல் விசாரணை**

1. நான் கீழப்புதூரில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சங்கர் என்பவரை தெரியும். வழக்கு சம்பவத்தின் போது நான் புதூரில் ஒன்பதாவது வார்டு கவுன்சிலர் ஆக இருந்தேன். அப்போது வருடம் 2012, 2013 ஆக இருக்கும் என்று நினைக்கிறேன். தேதி ஞாபகம் இல்லை. அப்போது ஒரு நாள் 12.00 மணி அளவில் எங்கள் ஊர் முக்கு கொடிக்கம்பம் பக்கத்தில் வைத்து மகளிர் போலீசார் நீங்கள் தானே கவுன்சிலர் இது போல் சண்டை நடந்ததாக நாங்கள் வந்துட்டு போனோம் என்பதற்கு கையெழுத்து போடுங்கள் என்று என்னிடம் கேட்டு கையெழுத்து வாங்கினார்கள்.

2. அவர்கள் எங்கள் ஊர் சாமி என்பவர் வீட்டில் வரைபடம் வரைய வேண்டும் என்று சொன்னார்கள். நான் அவசரமாக செல்ல வேண்டும் என்பதால் அங்கிருந்து சென்று விட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3. 17.3.2013 ஆம் தேதி 18.30 மணிக்கு நீங்களும், சாட்சி சங்கர் என்பவரும் எதிரி சின்னதுரை என்பவர் வீட்டு முன்பு வந்து கொண்டிருந்தீர்களா என்றால் நான் தெரு முக்கில் தான் நின்றேன். அப்போது போலீசார் மேற்படி எதிரி சின்னதுரை என்பவரது வீட்டை பார்த்து படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நீங்களும், சாட்சி சங்கரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதற்கு மாறுதலாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

4. உங்களுக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றால் ஆமாம். போலீசார் படம் வரைந்ததோ, எழுதியதில் கையொப்பம் வாங்கியதோ, அதில் என்ன எழுதி இருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் ஆமாம். அவர்கள் சின்னசாமி வீட்டில் பிரச்சனை என்பதால் வந்திருப்பதாகச் சொன்னார்கள். நீங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள கொடி கம்பம் என்பது மேற்படி கொடிக்கம்பத்தை தாண்டி தான் எதிரி சின்னசாமியின் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் ஆமாம். நீங்கள் அந்த பகுதியின் கவுன்சிலர் என்பதால் எழுதாத வெள்ளை பேப்பரில் தான் உங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். நீங்கள் சொல்வது போல் சொன்ன நாள் நேரத்தில் நீங்கள் அங்கு இல்லை என்றும் நீங்கள் கவுன்சிலர் என்பதால் கையெழுத்து செய்துவிட்டு பொய் சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

திறந்த நீதி மன்றத்தில் சாட்சி என் முன்பாக சாட்சியம் அளித்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கபட்டு சரி என சாட்சியால் ஒப்பு கொண்டு கையெப்பம் செய்யப்பட்டது

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் நீதிமன்றம் செங்கோட்டை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**...**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**CC 126/2014**

Deposition of witness for Prosecution **PW** 2

| | | |
|---|---|---|
| Name/ Age | : | **திருமதி.வள்ளியம்மாள்** |
| Father's/Husband Name | : | **கருப்பசாமி** |
| Village and Taluk | : | |
| Caste and Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 01-03-2023

(1, 2 எதிரிகள் வழக்கறிஞருடன் ஆஜர். 4, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 4, 5 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஆலங்குளம் நல்லூரில் குடியிருந்து வருகிறேன். சாட்சி ஒன்று தங்கம் எனது மகள். ஒன்றாவது எதிரி சின்னதுரை என்பவரை தெரியும். அவர் எனது மகளின் கணவர். இரண்டாவது எதிரி சமீனா என்பவரை தெரியாது. ஆனால் இரண்டாவதாக எனது மகளின் கணவர் சேர்த்து வைத்துள்ளார் என்று சொன்னார்கள். மூன்றாவது எதிரி சாமி எனது அண்ணன். நான்காவது எதிரி காளியம்மாள் மற்றும் 5 வது எதிரி கருப்பாயி ஆகிய இருவரும் எனது பெரியப்பா மகள்கள். எதிரிகள் மற்றும் உறவினர்கள் எனது மகளை பெண் கேட்டு வந்தார்கள். நான் பெண் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டேன்.

2. நான் வேலைக்கு போன சமயங்களில் ஒண்ணாவது எதிரி வீட்டிற்கு வந்து போய் இருந்துள்ளார். அதற்கு எனது பெரிய மகள் வரக்கூடாது என்று சத்தம் போட்டு உள்ளார். நாங்கள் வயலுக்கு நடவு வேலைக்கு போன சமயத்தில் ஒண்ணாவது எதிரி எனது மகளை கூட்டிக்கொண்டு சென்று விட்டார். கல்யாணமும் முடித்துக் கொண்டார். எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் 17 ஆண்டுகள் இருக்கும். அவ்வாறு கல்யாணம் ஆகி இரண்டு ஆண்

குழந்தைகள் இருந்தது. கீழப்புதூரில் குடியிருந்தார்கள். இரண்டாவது குழந்தை பிறந்து 40 நாளில் ஒன்னாவது எதிரி பார்க்க வந்தார். அதற்கு பின்பு ஒன்றாவது எதிரி மற்றொரு பெண்ணை கூட்டிக்கொண்டு சென்று விட்டார். நான் அந்தப் பெண்ணை பார்த்ததில்லை.

3. அதன் பின்பு ஒண்ணாவது எதிரி எப்போதும் என் மகளை அடித்துக் கொண்டே இருந்தார். எனது அண்ணன் சாமி இறந்ததற்கும் எனது மகள் ரெண்டு பிள்ளைகளை கூட்டிக்கொண்டு சென்றார். இறுதிச் சடங்குகளில் என் மகள் கலந்து கொண்டார். அதன் பின்பும் ஒரு வருடம் கழித்து அடித்து விரட்டி விட்டார். எப்போதும் ஒன்னாவது எதிரி குடித்துக்கொண்டு ஊரை பார்த்து போ இல்லை என்றால் கொன்றுவிடுவேன் என்று அடிப்பார். நான் என் வீட்டில் வைத்து பார்த்துள்ளேன்.

4. மற்ற எதிரிகள் எல்லாம் என்ன செய்தார்கள் என்றால் அவர்களும் என் பிள்ளையை விரட்டி விடு என்று ஒண்ணாம் எதிரியிடம் சொல்லி ஒரு லட்சம் பணமும், 25 பவுன் நகையும் கேட்டார்கள். வாங்கிக் கொண்டு வந்தால் நீ வைத்து காலம் கழி இல்லையென்றால் விரட்டி விடு என்று ஒன்னாவது எதிரியிடம் சொல்லி உள்ளார்கள். என் மகளும், எனது கணவரும் காவல் நிலையம் சென்றார்கள். என் கணவர் இறந்து மூன்று ஆண்டுகள் முடிந்து விட்டது. போலீசார் என்னை வந்து விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

5. காவல் நிலையத்தில் என்ன புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் ஆமாம். என் கணவர் தான் போனார். கீழப்புதூரில் என்ன நடந்தது, எந்த தேதியில் நடந்தது என்று உங்களால் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா என்றால் இல்லை. மேற்படி நகை மற்றும் பணம் கேட்டதாக நீங்கள் கூறியுள்ள விவரங்கள் உங்கள் மகள் சொல்லித்தான் உங்களுக்கு தெரியும் என்றால் ஆமாம்.

6. இந்த வழக்கு புகார் மனு கொடுத்த பின்பு தான் உங்கள் அண்ணன் சாமி

இறந்து போனார் என்றால் ஆமாம். இந்த வழக்கு போட்ட பின்பு உங்கள் அண்ணன் இறந்ததற்கு தான் உங்கள் மகள் சென்றால் என்றால் ஆமாம். ரூபாய் 30 ஆயிரம் வரை செலவு செய்தாள். உங்கள் மருமகனுடன் உங்கள் மகள் சேர்ந்து வாழ ஏதாவது வழக்கு போட்டாரா என்றால் போட்டிருப்பாள். ஜீவனாம்சம் கேட்டு உங்கள் மகள் கேஸ் போட்டாரா என்றால் அது அவளிடம் தான் கேட்க வேண்டும். உங்கள் மருமகன் தற்போது வரை விவாகரத்து கேட்டு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. உங்கள் ஊரிலாவது கூட்டம் ஏதாவது போட்டு பெரியவர்களை வைத்து பேச்சு வார்த்தை நடத்தினீர்களா என்றால் இல்லை.

7. நீங்கள் உங்கள் ஊரில் இருந்து பெரியவர்கள் யாரையாவது அழைத்து சென்று பேசினீர்களா என்றால் ஊரிலிருந்து அழைத்து சென்று பேசவில்லை. ஆனால் நாங்கள் பேசினோம். உங்கள் மகன் ஒன்னாவது எதிரியிடம் அவரது ஊரிலிருந்து நான்கு பேரை அழைத்து வந்து பேசினால் தான் மகளை அனுப்பி விடுவதாக சொன்னார் என்றால் ஆமாம். உங்கள் மகளாகத்தான் 1 வது எதிரியை பிரிந்து தனியாக நல்லூரில் வாழ்ந்து வருகிறார் என்றால் இல்லை. அதன் பின்பு ஏன் உங்கள் மகள் பிரிந்து இருந்தார், கணவரோடு சேர்ந்து வாழாமல் இருந்தாள் என்றால் ராத்திரி அடித்து விரட்டுவதால் அவள் தனியாக பிரிந்து இருந்தாள்.

8. அவ்வாறு அடித்து விரட்டியதாக உங்கள் மகள் போலீசில் புகார் கொடுத்துள்ளார் என்றால் கொடுத்துள்ளார். மேற்படி நகை பணம் கேட்டதாக சொல்லும் விபரம் பக்கத்து வீடுகளில் உள்ளவர்களுக்கு தெரியும் என்றால் ஆமாம். ஆனால் அவர்கள் எதிரிக்கு தான் சாதகமாக சொல்வார்கள். உங்கள் ஊரில் வந்து அதேபோல் விசாரித்தால் ஊரில் உள்ளவர்கள் சொல்வார்களா என்றால் சொல்வார்கள். எனது மகன் பெயர் கண்ணன். அவர் தற்போது இறந்து பத்து ஆண்டுகள் ஆகிறது.

9. நீங்கள் சொல்வது போல் சொன்ன நாளில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் எந்த பணமும், நகையும்

கேட்கவில்லை என்றும் அடித்து கொடுமை செய்யவில்லை என்றும் உங்களுடைய மகள் தான் ஒன்றாவது எதிரியை தனியாக தவிக்க விட்டு விட்டு அவருடைய இஷ்டம்போல் உங்கள் வீட்டில் வந்து வாழ்க்கை நடத்துகிறார் என்றால் சரியல்ல. இரண்டு முதல் ஐந்து எதிரிகளுக்கு வழக்கு சம்பவம் எதுவும் தெரியாது என்றும் சம்பவ சமயத்தில் அவர்கள் யாரும் உடன் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

10. உங்கள் மகள் உங்கள் வீட்டிற்கு வந்து நிறைய நாட்கள் கழித்து தான் ஒன்றாவது எதிரி இரண்டாவது எதிரியை திருமணம் செய்து கொண்டார் என்றால் இரண்டாவது மகன் எனது மகளுக்கு பிறந்து நாற்பதாவது நாளில் இரண்டாவது எதிரியை கூட்டிக்கொண்டு போனார். ஒன்றாவது எதிரி இரண்டாவது எதிரியை திருமணமே செய்யவில்லை என்றும் நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றும் தற்போது உங்கள் மகளோடு ஒன்னாவது எதிரி சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல.

திறந்த நீதி மன்றத்தில் சாட்சி என் முன்பாக சாட்சியம் அளித்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கபட்டு சரி என சாட்சியால் ஒப்பு கொண்டு கையெப்பம் செய்யப்பட்டது

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் நீதிமன்றம் செங்கோட்டை